Registered as a News Paper

மக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

Nallur Branch Library

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily


மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 11 ( 23 - 04 - 1992 ) வியாழக்கிழமை ஓசை: 65

Nallur Branch Library

## குடும்ப அட்டைகளை உடன் பதிய வேண்டுகோள்

தற்பொழுது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு பதியப்பட்டுக் கொண்டிருக்கும் குடும்பப் பதிவு அட்டை வேலைகள் யாவும் எதிர்வரும் செவ்வாய்கிழமை (28 . 04 . 92) க்கு முன்பாக பூர்த்தி செய்யப்பட வேண்டியிருப்பதால், பொது மக்கள் யாவரும் தங்கள் பிரிவு கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் குடும்பப் பதிவு அட்டைகளைப் பூர்த்தி செய்யுமாறு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். அவர் இது தொடர்பாக விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் 01 - 05 - 92 முதல் அரச அலுவலகங்களுடன் பொது மக்கள் தொடர்பு கொள்ளும்போது இக்குடும்ப அட்டையே முக்கிய ஆவணமாகக் கோரப்படவிருப்பதால், இக்குடும்பப் (4 ஆம் பக்கம் பார்க்க)



நல்லெண்ண சமாதானத் தூது மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ள பௌத்த மதகுருமாரில் ஒரு பகுதியினர்

# சமாதானதூதுவர்களாகவே தமிழரிடம் வந்துள்ளோம்

## வரவேற்பு நிகழ்ச்சியில் பிக்குகள்

(யாழ்ப்பாணம்)

''சமாதான தூதுவர்களாகவே தமிழரிடம் வந்துள்ளோம்'' என நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ள பௌத்த பிக்குகள் தெரிவித்தனர்.

சமாதான நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு வட பகுதி வந்துள்ள பௌத்த மதகுருமாரை நேற்றுப் பிற்பகல் 5 15 மணியளவில் விடுதலைப் புலிகள் யாழ் நகரில் வரவேற்றனர். பலாலி விமான நிலையத்திலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளால் அழைத்து வரப்பட்ட இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் விசேட அதிரடிப்படைப் பிரிவின் பாதுகாப்புடன் சேந்தாங் குளத்திலிருந்து யாழ் நகருக்கு அழைத்து வரப்பட்டனர்,

யாழ் பாண மாவட்ட விசேட தளபதி தமிழ்ச் செல்வன், யாழ் மாவட்டத் தளபதி செல்வராஜா, யாழ்ப்பாண மாவட்ட அரசியல்நிர்வாகப் பொறுப்பாளர். இளம்பரிதி, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் பௌத்தமத தூதுக் குழுவினரை வரவேற்றனர்.

இவ் வரவேற்பு நிகழ்ச்சியில் பேசிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் சிங்கள மக்களுக்கு எதிராகவும் போராடவில்லை, சிங்கள தேசத்திற்கு எதிராகவும் போராடவில்லை, தமிழர் தாயகத்தைக் காப்பாற்றவே போராடுகின்றனர் என தெரிவித்தார். மேலும், யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ள பௌத்த பிக்குகள் எடுத்த தீர்மானத்தைப் பாராட்டியதோடு, தென்னிலங்கை பத்திரிகைகள் வெளியிடும் தவறான செய்திகள் இனங்களுக்கிடையில் முரண்பாடு (4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை தடைசெய்வதா? இல்லையா?

# இந்திய அரசு மட்டத்தில் முரண்பாடு

## முடிவு எடுப்பதில் தாமதம்

(டில்லி)

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது

## குமண வருவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசியப் பொருள்களுடன் இன்று வருமென எதிர்

## புலிகளுடன் இன்று உத்தியோக பூர்வ பேச்சு

பௌத்த மதகுருமார் தூதுக் குழுவினர் இன்று காலை பத்து

பொதுத்தாபனங்கள், மத பீடங்கள் மற்றும் பிரமுகர்

## இளப்பன்பேர்க் கட்டடங்கள் இராணுவத்திடம்

(திருக்கோணமலை)

தமிழகதிசன் தங்கியிருக்கும் இளப்பன்பேர்க் கட்டடங்கள் சிறிலங்கா இராணுவத்திடம் ஒப்படைக்கப் படவுள்ளன.

இளப்பன் பேர்க் இறங்கு துறையும், விமானம் தங்கும் கட்டடங்களும் 2ஆவது உலக யுத்தகாலத்தில் பிரித்தானிய இராணுவத்தினால் அமைக்கப் பட்டவை என்பது குறிப்பிடத்

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது தொடர்பாக அதிகாரிகள் மத்தியில் பெரும் கருத்து வேறுபாடு நிலவுவதாகத் தெரிய வருகிறது. இதனால் விடுதலைப் புலிகளைத் தடை செய்வது குறித்து தீர்மானம் எடுப்பதில் மத்திய அரசாங்கத்திற்குக் காலதாமதம் ஏற்படுவதாகவும் அறியமுடிகிறது.

விடுதலைப் புலிகளை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையைப் பரிசீலித்த மத்திய உள்துறை அமைச்சு அதன் சாதகங்கள், பாதகங்கள் இரண்டையும் ஆராய்ந்து இதுவரை எந்த முடிவிற்கும் வர முடியவில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது தொடர்பாக இந்திய அதிகாரிகள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவுவதாக தெரிவிக்கப் படுகின்றது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவும் தமிழக காங்கிரஸ் குழுவினரும் விடுதலைப் புலிகளை தடைசெய்ய வேண்டுமென்று விடுத்த கோரிக்கையை அடுத்து செயலாளர்களின் நிர்வாகக் குழுவொன்றை இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அமைத்தார்.

இதுவரை இந்த நிர்வாகக் குழு மூன்று முறை கூடியுள்ளது. ஆனால் எதுவித முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இக் கூட்டங்களில் இந்திய இராணுவ அதிகாரிகள், புலனாய்வுப் பிரிவுகளின் அதிகாரிகள், உள்துறை அமைச்சு, சட்ட அமைச்சு, வெளியுறவு அமைச்சு ஆகியவற்றைசேர்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இலங்கையின் புவியியல் நிலை, அரசியல் நிலை, இந்தியாவின் நீண்ட கால நலன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

தொலை நோக்கு அடிப்படையில் பார்க்கும்போது விடுதலைப் புலிகளைத் தடை செய்வதென்பது எதிர்மறையான பலன்களையே தருமென்று சட்ட அமைச்சும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அத்தியாவசியப் பொருள்களுடன் இன்று வருமென எதிர்பார்க்கப்பட்ட 'குமண' கப்பல் இன்றுவந்து சேரவில்லை.

இக்கப்பல் எதிர்வரும் சனிக்கிழமை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (பா)

பௌத்த மதகுருமார் தூதுக் குழுவினர் இன்று காலை பத்து மணியளவில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளோடு உத்தியோக பூர்வ முதலாம் கட்ட பேச்சுகளை நடத்தவுள்ளனர். அதன் பின்னர் பல்வேறு பொதுத்தாபனங்கள், மத பீடங்கள் மற்றும் பிரமுகர்களையும் சந்திக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதுடன், பாதிக்கப்பட்ட இடங்களையும் குழுவினர் சுற்றிப் பார்வையிடவுள்ளனர்.

பட்டவை என்பது குறிப்பிடத் தக்கது.

கிளப்பன்பேர்க்திருக்கோணமலையில் சீனன்குடாவுக்கு அருகாமையில் உள்ளது.

# கடற்படையை நவீனமாக்க சிறிலங்கா அரசு தீவிர முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையை நவீனமயமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சிறிலங்காப் பிரதமரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமாகிய டி. பி. விஜயதுங்கா அறிவித்துள்ளார்.

வடபகுதி கடற்பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக பாதுகாப்பு நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் என்றும்,

இந்திய மீனவருடன் விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து அரசாங்க பாதுகாப்புப் பிரிவினருக்கு தெரிய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். குடா நாட்டில் வடக்குக் கரையில் அத்து மீறிப் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களுடன் இணைந்து விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தரப்பில் சி. வி. குணவர்த்தன எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே டி. பி. விஜயதுங்கா இவ்வாறு தெரிவித்தார்.

## வங்கி ஊழியர் போராட்டம்

(கொழும்பு)

சம்பளஉயர்வு உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து எட்டுத் தனியார் வங்கிகளைச் சேர்ந்த ஊழியர்கள் நாடு தழுவிய மறியல் போராட்டத்தை நடத்தவுள்ளனர். வங்கி ஊழியர் சங்கத்தின் கோரிக்கைகளை வங்கி நிர்வாகம் வழங்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள் விரும்பினால் மத்தியஸ்தம் வகிக்க தயார்

## - சுவீடிஸ் வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு

(ஸ்ரொக்கோம்)

இலங்கையின் இனநெருக்கடியில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் விரும்பினால் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபடுவதற்கு சுவீடிஸ் அரசாங்கம் தயாராகயிருப்பதாக அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் செல்வி மார்கரதா அஃப் அக்லாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை நெருக்கடியில் சுவீடன் மத்தியஸ்தம் செய்யுமாறு எனக் கேட்டு பேராசிரியர் பீட்டர் ஷோக் எழுதிய கடிதம் ஒன்றுக்கு அக்லாஸ் அண்மையில் அனுப்பிய பதிலிலேயே தனது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெரியப்படுத்தியிருக்கிறார்.

சுவீடிஸ் வெளியுறவு அமைச்சரின் சார்பில் செல்வி ஈவா ஹெக்ஷெர் பேராசிரியர் ஷோக்கிற்கு எழுதிய அப்பதிலிலேயே பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

இலங்கையிலுள்ள நிலைவரங்கள் தொடர்பாக நீங்கள் எழுதிய இரண்டு கடிதங்களுக்கும் பதில் அனுப்புமாறு வெளியுறவு அமைச்சர் என்னை பணித்திருக்கிறார். இலங்கையில் சண்டையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இரு தரப்பினருடனும் சமாதான உடன்பாடொன்றை காண்பதற்கான முயற்சியில் தீவிர பங்கு ஒன்றை ஆற்றுவது குறித்து சுவீடன் பரிசீலிப்பதை சாத்தியமாக்கு முகமாக அத்தகைய சமாதான முயற்சியொன்றில் ஈடுபடுமாறு இரு தரப்பினரும் சுவீடிஸ் அரசாங்கத்தை வெளிப்படையாக கேட்க வேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பௌத்த குருமார் மீது முஸ். காங்கிரஸ் குறை

(கொழும்பு)

பௌத்த குருமாரின் யாழ்ப்பாண விஜயத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்பு அளிக்கின்ற போதும் முஸ்லிம்களின் கருத்தை அறிய முற்படாமை தவறானதே என்று இக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ தூதுக்குழு உட்பட ஏற்கனவே யாழ். சென்று வந்த தூதுக்குழுக்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளைச் சந்தித்து அவர்களின் கருத்தை அறிவதில் மாத்திரமே அக்கறை கொண்டிருந்தன என்றும்,

ஆனால் தற்போது யாழ். சென்றுள்ள பௌத்த தூதுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இவ்வருட முடிவுக்கு முன்பு இனப்பிரச்சினை தீர்வுக்கு சிபாரிசு

## - பிரேமதாசா நம்பிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேண்டிய சிபாரிசுகளை இவ்வருடம் முடிவடைவதற்கு முன்பாக பாராளுமன்றம் அறிவிக்கும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சிறி ஜெயவர்த்தனபுரக் கோட்டேயில் பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு பத்தாண்டு நிறைவுறுவதைக் குறிக்கும் முகமாக நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் :

1931 ஆம் ஆண்டில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது முதல் பாராளுமன்றம் பல சவால்களை சந்தித்துள்ளது என்றும்,

பாராளுமன்றத்தில் உறுப்பி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் 14 தமிழர் பொலிசாரால் கைது

புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் 14 தமிழ் இளைஞர் யுவதிகளை விசாரணைக்கென பொலிசார் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

பள்ளியவத்தை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் இருவர் புலிகள். கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், வவுனியாவைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிசார் கூறியுள்ளனர்.

இதே வேளை வத்தளை பொலிசார் அப்பகுதிகளில் உள்ள வீடுகளில் தற்காலிகமாக தங்குவோர் பற்றிய விபரங்களை அறிவிக்கும்படி வீட்டு உரிமையாளர்களை கேட்டுக் கொண்டதுடன் சந்தேகத்திற்கு இடமாக அங்கு உலாவுவோர் தொடர்பான தகவல் தருமாறு ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

## பதவி வெற்றிடம்

### கணக்காளர்

மேற்குறிப்பிட்ட பதவிக்கு தகைமையுள்ளவர்கள் 25 - 04 - 92 காலை 10 மணிக்கு உரிய ஆவணங்களுடனும் சொந்த விபரப்படிவத்துடனும் நேரில் வரவும். வேதனம் நேரில் தீர்மானிக்கப்படும்

மாறன் பதிப்பகம்

274, மருத்துவமனைச்சாலை

யாழ்ப்பாணம். (சி 4302)

## வரி விளம்பரம்

**தவறி விட்டது**

சிவன்கோயில் மேற்கு வீதியில் எனது பணப்பை 21-04-1992 அன்று தவறிவிட்டது. அதனுள் இருக்கும் ச. சச்சிதானந்தம் 64B கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13 என்ற விலாசமுடைய அடையாள அட்டையை ச. சச்சிதானந்தம், பழைய டச்றோட், கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.
ச. சச்சிதானந்தம் (2491)



**A/L 94**
**விலங்கியல்**
**பிரிவு II**

**ஆரம்பம்:**
**25. 04. 92**
**காலை 7 மணி**

ஆசிரியர்:
ப. நாகநாதன்
பிரிவு I
நடைபெறுகின்றது
(காலை 9.00-10.00மணி)

**New Master Institute**
**B.M.C LANE, JAFFNA.**

(ஜ-4307)


# உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கோழித்தீன் விற்பனைக்கு

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் கோகுலம் கால்நடை உற்பத்தி நிலையத்தினால் உள்ளூர் உற்பத்திப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கோழித்தீன்கள் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குஞ்சுத்தீன், வளர்கோழித்தீன், முட்டையிடும் கோழித்தீன் என்பன அவ்வப் பருவக் கோழிகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

கோகுலம் கால்நடை உற்பத்தி நிறுவனம் வல்வெட்டித்துறை, உதயம் பல்பொருள் அங்காடி, தாயகம் பல்பொருள் அங்காடிகள், மற்றும்மருதம்கால் நடைத்தீவன அங்காடிகளிலும் கோழித்தீன் வகைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

# அகில இந்திய காங்கிரஸில் மூப்பனாருக்கு இடமில்லை

(சென்னை)

தமிழக இந்திரா காங்கிரஸின் முன்னாள் தலைவர் கறுப்பையா மூப்பனார் அகில இந்திய காங்கிரஸில் எந்தப் பதவியுமோ அல்லது உறுப்புரிமையையோ வகிக்காதவராக இருக்கிறார் என தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியினருக்குள் ஏற்பட்டிருக்கும் உட்பூசல் காரணமாக உறுப்புரிமை விண்ணப்பப் படிவத்தை இத்தடவை நிரப்பிக் கொடுக்காததாலேயே மூப்பனாருக்கு இத்தகைய நிலை ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் திருப்பதியில் கடந்த வாரம் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டு அரங்கிற்குள் நுழைவதற்கு அகில இந்திய காங்கிரஸ் தொண்டருக்கான அனுமதிச் சீட்டைப் பெறவேண்டியிருந்தது.

## முத்தமிழ் விழா

(குருநகர்)

யாழ் ஆயர் வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பவள, பொன், வெள்ளி விழாக் கொண்டாட்டங்களின் முன்னோடி நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றம் எடுக்கும் மூன்றுநாள் முத்தமிழ் விழா நாளை (24 - 04 - 92) மாலை 5.00 மணிக்கு கோலாகலமாக ஆரம்பமாக இருக்கிறது.

25 ஆம் 26 ஆம் திகதிகளிலும் விழா தொடர்ந்து நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தினமும் திருப்புகைகள், இசைக்கச்சேரி. கவியரங்கம், பட்டிமண்டப, நடனம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் விழாவைச் சிறப்பிக்குமென அறிவிக்கப்படுகிறது. (21)

# நல்லரக நெல்லுக்கு ஜெயலலிதாவின் பெயர்

(சென்னை)

பஞ்சாப் மாநிலத்தில் உற்பத்தியாகும் பாசுபதி நெல் போன்ற வாசனை நெல் தமிழ் நாட்டிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு 'ஜெ ஜெ' (ஜெயலலிதா ஜெயராம்) என பெயர் சூட்டப்படும் என்று தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் கு.ப.கிருஷ்ணன் கடந்த வாரம் சட்டசபையில் தெரிவித்தார்.

தஞ்சையில் உள்ள ஆடுதுறை நெல் ஆராய்ச்சிமையத்தில் வாசனைரக நெல் கண்டு பிடிக்கப்பட்டு விட்டது.

அதற்கு என்ன பெயர்வைக்க வேண்டும் என்பதை புரட்சித் தலைவியிடம்கலந்துயோசித்து நல்ல பெயராகச் சூட்டி விரைவில் பாசுபதியைப் போன்ற நல்லரகம் வெளியிடப்படும் என்று அமைச்சர் கூறியபோது குறுக்கிட்ட காங்கிரஸ் உறுப்பினர் ஆர். சிங்காரம் ஆடுதுறையில் கண்டு பிடிக்கப்பட்ட அந்த வாசனைரக நெல்லுக்கு 'ஜெ. ஜெ' என்று பெயர் வைக்க முடியுமா? எனக் கேட்டார்.

எதையும் செய்யக் கூடிய புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதி பெற்று அந்தப் பெயர் வைக்கப்படும் என்று கு.ப.கிருஷ்ணன் பதிலளித்தார்.

## தமிழ்நாட்டில்

# பத்திரிகைகள் - அரசுக்கிடையில் உறவுகள் மோசமடைகின்றன

(சென்னை)

ஜெயலலிதா அரசாங்கம் ஆட்சிக்கு வந்து பத்து மாதங்கள் கூட ஆகவில்லை ஆனால் பத்திரிகைகளுக்கும் அரசுக்கும் இடையிலான உறவு மோசமடைவதற்கான பின்னணிகள் அதிகரித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறப்புரிமை மீறல்கள் தொடர்பாக மாநில சட்டசபையில் அளிக்கப்பட்ட தொடர்ச்சியான பல தீர்ப்புகள் பத்திரிகைகளை கடுமையாக நெருடியிருக்கின்றன.

'இலஸ்ரேட்டட் வீக்லியின்' முன்னாள் கட்டுரை ஆசிரியர் சட்ட சபைக்கு வரவழைக்கப்பட்டவுள்ளார் சட்டசபையின் வரலாற்றிலேயே முதல் தடவையாக இத்தகைய கைங்கரியம் நடைபெறுவது இதுவே முதல் தடவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தி.மு.க. தினசரியான முரசொலியினதும் கோயம்புத்தூர் பதிப்பான மாலை முரசுவினதும் ஆசிரியர்களும் நிருபர்களும் கூட கண்டிக்கப்படவுள்ளனர் என்றும், அப்பத்திரிகைகளின் நிருபர்களின் சட்டசபை கலரி அனுமதி அட்டைகள் பத்துநாட்களுக்கு வாபஸ் பெறப்படவிருக்கின்றன.

அத்துடன் அவமதிப்பாகவும் கண்டன ரீதியாகவும் எழுதப்படும் விடயங்களை கட்டுப்படுத்த பத்திரிகைச் சட்டமூலம் ஒன்றைக்கொண்டு வருவது குறித்து அரசாங்கம் சிந்திப்பதாக சட்ட சபையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்திருப்பதும் பத்திரிகைகளை மேலும் அதிருப்தி கொள்ளச் செய்திருக்கிறது.

மகா மகத்தன்று இடம் பெற்ற துயரச்சம்பவம் முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்திக்க முடியாமல் இருக்கின்றமை சில அமைச்சர்களுக்கும் அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர்களுக்கும் எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள், ஒழுங்கீனங்கள் ஆலய நிர்வாக வாரியத்தில் உள்ள உறுப்பினர்கள் பற்றிய விடயம்காஞ்சி சங்கராச்சாரியாருடன் ஏற்பட்டிருக்கும் கருத்து பேதம் ஆகியவையே சர்ச்சையை உருவாக்கியுள்ள விடயங்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

''திராவிட இயக்கம் மாநிலத்தில் ஆழமாக வேரூன்ற ஆரம்பித்து கட்சிகள் அவற்றின் தொண்டர்களின் பத்திரிகைகள் பிரச்சினைகளை தீர்ப்பதிலும் பார்க்க மேலும் பிரச்சினைகளை உருவாக்கவே செய்யும் பத்திரிகைகளை நசுக்குவதற்கு இது ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் என்ற அச்சம் பத்திரிகையாளர் மத்தியில் வந்துள்ளது.

## திருச்சி அகதி முகாம்களில்

# வாந்திபேதி நோய் பரவல்; 15 தமிழ் அகதிகள் பலி

(சென்னை)

திருச்சி முகாம்களில் சுகாதார சீர்கேட்டினால், கடந்த நான்கு மாதங்களில் பதினைந்து இலங்கைத் தமிழ் அகதிகள் இறந்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருச்சி மாவட்டத்தில் ஒன்பது முகாம்களில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவற்றில் ஒன்று வாழவந்தான் கோட்டையில் உள்ளது. இங்கு 534 குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளன. துவக்கத்திலேயே குடிநீர், சுகாதார வசதி மிகவும் குறைவாகக் காணப்பட்டது. முகாமுக்கு சுகாதார அதிகாரிகள் அவ்வப்போது வந்து சிகிச்சையளிக்க வேண்டும். ஆனால் யாரும் வருவதில்லை.

இந்த நிலையில் அகதிகளில் பலர் வாந்திபேதி கண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை பதினைந்து அகதிகள் இறந்திருக்கிறார்கள்.

அந்த முகாமில் இருக்கும் அகதி ஒருவர் கூறுகையில் 'குழாய்களின் மூலம் கிடைக்கும் தண்ணீர் போதுமானதாக இல்லை. அத்தோடு மட்டுமல்ல. சுகாதாரமற்ற குடிநீராகவும் தெரிகிறது இது தெரிந்தும் வேறு வழியின்றி நாங்கள் அந்தத் தண்ணீரைத்தான் 'பயன்படுத்துகிறோம்' என்றார்.

# காங்கிரஸின் கட்சித்தேர்தல் தமிழகத்தில் நடைபெறாது

(சென்னை)

தமிழக காங்கிரஸ் உறுப்பினர்களின் பட்டியல் காணாமல் போயிருப்பதால் தமிழ் நாட்டில் காங்கிரஸின் கட்சித் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியப்பாடுகள் அண்மையில் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கட்சித் தேர்தலில் வாக்களிக்க வேண்டுமானால். தீவிர உறுப்பினர்கள் ஒரு வருட காலத்தை உறுப்புரிமையில் பூர்த்தி செய்திருக்க வேண்டும். தமிழகத்தை பொறுத்தவரை காங்கிரஸில் இந்நிலை இல்லை. உறுப்பினர்கள் பெயர்ப்பட்டியலில் காணாமல் போய்விட்டதாக தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி சில நாட்களுக்கு முன்னர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு தெரிவித்ததாக திருப்பதி மாநாட்டில் வைத்து கமிட்டியின் பேச்சாளரான சந்துலால் தெரிவித்தார்.

மாற்று வழி என்ன என்று கேட்டபோது; கட்சியின் அடுத்த சுற்றுத் தேர்தல் நடைபெறும்போதுதான் தமிழகத்தில் காங்கிரஸ் அமைப்பு தேர்தலை நடாத்தக் கூடியதாக விருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தேர்தலை நடத்த இரு வருடங்களும் செல்லலாம் அதுவரைக்கும் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தான் விரும்பும் ஒருவரை தேவையேற்படின் தமிழக காங்கிரஸ் தலைவராக நியமிக்கலாம். ஆனால் திருப்பதி மாநாட்டில் அந்நிலை ஏற்படவில்லை.

# 'கன்சார்ட்' அறிக்கை மும்மொழிகளிலும் வரும்


## தனியார் கல்விநிறுவன ஒன்றியம்
யாழ்ப்பாணம், மருதனாமடம்
கோட்டங்களுக்கான

## விசேட பொதுக் கூட்டம்

யாழ் கோட்டம்:
இடம்: விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க யாழ் கோட்ட செயலகம் நல்லூர் கோயில் முன்பாக.
காலம்: 24. 04. 92 வெள்ளி பி.ப. 3. 00 மணி

மருதனாமடக் கோட்டம்:
இடம்: விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க மருதனாமடகோட்ட செயலகம் உரும்பராய்.
காலம்: 24. 04. 92 வெள்ளி காலை 10. 00 மணி

மே தின ஏற்பாடுகள் பற்றி கலந்துரையாடுவதற்காக சகல இயக்குநர்களும், ஆசிரியர்களும் தவறாது சமூகம் தரவும்.

- பொதுச்செயலாளர்

(2493)



யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
இலங்கை

**முது தத்துவமானி தகுதிகாண் தேர்வு 91 / 92**

முதுதத்துவமானி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பில் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பொருளியல், புவியி



யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

**பட்டப்பின் படிப்பிற்காகப் பதிவு செய்தல் 1992**

(முதுகலைமானி / கலாநிதி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1991 92 கல்வியாண்டின் பின்வரும் பாடநெறிகளுக்கு பட்டப்பின் படிப்பிற்காக தகுதி பெற்றவர்

# A/L 94

கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகள்

**ஆரம்பம்: 23. 04. 92**

காலை 9. 00 மணி

★ முன் கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி/4292)



## பதவி வெற்றிடங்கள்

பிரபல்யமான நிறுவனம் ஒன்றினால் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகைமைகளும், அனுபவங்களும் உள்ளவர்களிடம் இருந்து 30 - 04 - 92 க்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெற்றிடங்கள்

1. உள்ளக கணக்குப் பரிசோதகர்
2. கணக்குப் பதிவாளர்
3. களஞ்சியப் பொறுப்பாளர்
4. தமிழ் சுருக்கெழுத்து / தட்டெழுத்தாளர்
5. முகாமையாளர் :- தும்புத்தொழிற்சாலை

விளம்பர இல. 124

மே / பா. ஈழநாதம்

31, மகேந்திராவீதி,

யாழ்ப்பாணம்.

(சி/4304)


யல், இந்து நாகரிகம், தமிழ், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், வரலாறு. மெய்யியல், மொழியியல், நுண்கலை, நாடகமும் அரங்கியலும்.

அறிவுறுத்தல்களுடன் கூடிய விண்ணப்பப்படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 27 4. 92 இலிருந்து 25.05.92 ஆம் திகதிவரை பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக் கழக நிதியாளரிடமிருந்து 10 ரூபா செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் 8/- ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டிய சுய விலாசமிடப்பட்ட தபால் உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 01.06.92 திகதிக்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். 1.6 92 இற்குப் பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

யாழ்ப்பாணம்,

10.04.1992

(சி/4312)

களிடமிருந்து விண்ணப்பங்கள் 1. 6. 92 வரை கோரப்படுகின்றன.

பொருளியல், கல்வியியல், புவியியல், இந்து நாகரிகம், அரசியல், சமஸ்கிருதம், வரலாறு, தமிழ். மெய்யியல், மொழியியல், கிறிஸ்தவ நாகரிகம், சித்த மருத்துவம், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், வர்த்தகம்.

விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ 27. 4 92 இலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக் கழக நிதியாளரிடம் ரூபா 10 /- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10 /- ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் 8/- ரூபா பெறுமதியுள்ள முத்திரை ஒட்டி சுய விலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 1. 6. 92 இற்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். 1. 6. 92 இற்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

யாழ்ப்பாணம்.

10. 04. 1982

(சி/4311)

றின் சொந்தத்தில் பத்திரிகைகளை நடத்த ஆரம்பித்த நாள் முதலிருந்தே குற்றச் சாட்டுக்களும் வசை மாரிகளும் தாராளமாக பரிமாறப்படுகின்றன என்றன என்று சில அரசியல் பிரமுகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இப்போது மாநில சட்ட சபையில் தி.மு.க.வின் பிரசன்னம் ஏதோ பெயரளவுக்குத் தான் இருக்கிறது எனவே தி.மு.க தலைவர்களினாலும் அவர்களுக்கு ஆதரவானவர்களினாலும் நடத்தப்படும் பத்திரிகைகள் ஜெயலலிதா அரசாங்கத்தின் இருண்ட பக்கத்தைப்படம் பிடித்துக் காட்டக் கூடிய மட்டும் முயற்சிக்கின்றன.

அத்துடன் விசேட சட்டங்

## நிறைவு விழாவும் பொதுக்கூட்டமும்

(கொக்குவில்)

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் ஓராண்டு நிறைவு விழாவும் பொதுக்கூட்டமும் வரும் சனிக்கிழமை(25 4.92) பிற்பகல்1 00மணிக்கு சங்கப்பணிமனையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நிர்வாகிகள் தெரிவுக்கூட்டம்

(குருநகர்)

யாழ். மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம் 24-4-92 வெள்ளிக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும்.

சின்னக்கடை வடக்கு வீதியில் உள்ள சங்கக் காரியாலயத்தில் திரு, அ. அன்ரன் தலைமையில் கூட்டம் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

(கொழும்பு)

பாராளுமன்ற விவாதங்களைப் பதிவுசெய்யும்அதிகார அறிக்கையின் (கன்சாட்) முகப்புப் பக்கத்தைசிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அச்சிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தற்போது இந்த அதிகார அறிக்கையின் முதல் பக்கம் சிங்கள மொழியில் மட்டுமே அச்சிடப்படுகிறது. இனிமேல் மும்மொழிகளிலும் அச்சிடுவதற்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளையில் தேவையான திருத்தம் செய்யப்பட உள்ளது.

பாராளுமன்றத்தில் உரைகள் நிகழ்த்தப்படும் மொழியிலேயே பாராளுமன்ற விவாதங்களைப் பதிவு செய்யும் அதிகார அறிக்கையில் (ஹன்சாட்) பதிவு செய்யப்படும்.

உரை நிகழ்த்துபவரின் பெயர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகய மொழிகளில் பதிவு செய்யப்படவுள்ளது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை திருத்துவதற்காக பலவிதப்புரைகள் செய்யப்பட்டுள்ளதுடன் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக இவை சபையிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

# நினைவுகூருகின்றோம்...

# 1992 -04 -23

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ **சின்னத்துரை** (நல்லதம்பி சின்னத்தம்பி - முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு.)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ஸ்கொட்** (யேசுதாசன் அன்ரன் ஸ்கொட் - கள்ளிக்கட்டைக்காடு, உயிலங்குளம், மன்னார்.)

1991 ஆம் ஆண்டு வசாவிளான், ஒட்டகப்புலம் பகுதியில் சிறிலங்காப் படையினர் குறிபார்த்துச் சுட்டதில் வீரச்சாவெய்திய -

**2 ம் லெப். மீரான்** (சண்முகராசா கிருபாகரன் - காரைநகர்.)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் சின்னத்துரை ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(சி/4310)

Nallur Branch Library

**சிந்தனைக்கு**

அறிவிலி அதிகாரத்தில் இருந்து விட்டால்
அதிக ஆபத்தானவன்

— யாரோ

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 23-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 49

# மீனவர் மீது தாக்குதல்; திட்டமிட்ட ஒரு சதி

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பதற்கு சிறிலங்கா இராணுவம் எந்தளவிற்கு ஒத்துழைப்பு வழங்கும்? அரசியல் வட்டாரங்களில் அண்மைக் காலத்தில் இது ஒரு பலமான கேள்வியாக உள்ளது. ஏனெனில், சிறிலங்காவில் இன்று இராணுவம் பலம் பொருந்திய ஓர் அமைப்பாகவும், அரசாங்கம் இராணுவத்தைப் புறந்தள்ளிவிட்டு ஆட்சி செய்ய முடியாத ஒரு நிலையும் உருவாகியுள்ளமையே காரணமாகும். இந்நிலையில் இராணுவத்தின் நிலைப்பாடு இனப்பிரச்சினைத் தீர்விற்கு அவசியமாகிறது என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இனப்பிரச்சினையை இராணுவ ரீதியில் அணுக வேண்டும் என்பதிலேயே இராணுவம் முனைப்பாகவுள்ளது. அண்மையில் இராணுவ அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றமும் அதையே உணர்த்துவதாக உள்ளது. இதேவேளை இரண்டு தினங்களுக்கு முன்னர், பருத்தித்துறைக் கடற்பரப்பில் நடந்த சம்பவமும் இராணுவத்தின் மன நிலையை படம் பிடித்துக் காட்டுவதாகவுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு பௌத்த பிக்குகளின் சமாதான நல்லெண்ணத் தூதுக்குழுவொன்று வர விருப்பதாக அறிவிக்கப்பட்ட பின்னர் சிறிலங்கா கடற்படையினர் தமிழ் மீனவர்கள் மீது பாரிய தாக்குதல் ஒன்றை திட்டமிட்டு மேற்கொண்டுள்ளனர். எட்டுப் படகுகளில் சென்ற 27 மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து மீனவர்கள் அனைவரும் கடலில் குதித்துள்ளனர். இதில் இருவர் மரணமானார்கள். மூவரைக் காணவில்லை. 22 பேர் தேடிச்சென்ற உறவினர்களால் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் போது மீட்கப்பட்டார்கள். அவர்களின் படகுகளுக்கு என்ன நடந்தது எனத் தெரியவில்லை.

மீனவர்கள் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட இத் தாக்குதல் வேண்டுமென்றே செய்யப்பட்ட தாக்குதல் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை. ஏனெனில் படகில் வலையுடன் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் அவர்கள். ஆனால், சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களோ, விடுதலைப் புலிகள் கடற்பரப்பில் கடற்கண்ணிகளை வைத்துக் கொண்டிருந்தபோது தாக்குதல் மேற்கொண்டதாகவும், படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாகவும் அறிவித்துள்ளது. பாதுகாப்பு வட்டாரங்களின் இக் கூற்று எதுவித ஆதாரமும் அற்றது. வேடிக்கையானது.

விடுதலைப்புலிகள் கடற்கண்ணிகளை கடலில் வைப்பதானால் ஒரே தடவையில் எட்டுப் படகுகளில் 27 பேர் சென்று வைப்பதாகக் கூறுவது ஒரு

# "தனி நாட்டை நிறுவி உரிமைகளைப் பாதுகாப்போம்"

அரசாங்கத்துக்கும் தமிழ் மக்களுக்குமிடையே உடன்பாடு ஏற்பட முடியுமா என்ற மிகப்பெரிய பிரச்சினை குறித்தே நான் இங்கு பேசவிழைகிறேன்.

இரண்டு சந்தர்ப்பங்களில் சிங்கள அரசாங்கங்களுடன் உடன்பாட்டுக்கு வரக்கூடிய வாய்ப்பை நான் பெற்றிருந்தேன். முதலாவதாக திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும், அவருடைய அரசாங்கத்தினரும், எம்மோடு ஒரு பொருத்தத்துக்கு வந்தார்கள். அப்பேச்சுவார்த்தையின்போது அரசாங்கத்தின் சார்பில் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவும் அவரது அமைச்சர்களும் கலந்துகொண்டனர். எனது கட்சியைச் சேர்ந்த சில சகாக்களுடன் நானும் அதிலே கலந்து கொண்டேன். நாம் ஒரு பொருத்தத்துக்கு வந்தோம்.

இந்தப் பொருத்தத்தைப் பற்றிப் பிரதமர் அப்போது பகிரங்கப்படுத்தினார். அது ஓர் தனிப்பட்ட விவகாரம் அல்ல எம்முடன் செய்து கொண்ட பொருத்தத்தை திரு. பண்டாரநாயக்கா ஒரு பிரசுரமாகவும்வெளியிட்டார். அந்தப் பொருத்தத்தின்காரணமாக நாம் அப்போது மேற்கொள்ளவிருந்த சத்தியாக்கிரகத்தைக் கைவிடச் சம்மதித்தோம். சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பமாவதற்கு சில தினங்களுக்கு முன்னரே அவர் இந்தப் பொருத்தத்தைச் செய்தார்.

அந்தப் பொருத்தத்தின்படி எமக்கு அவர் மாநில சுயாட்சிச் சபைகளை வழங்க ஒப்புக்கொண்டார். இந்த மாநில சபைகளுக்கு தேர்தல் மூலம் உறுப்பினர்களைத் தேர்தெடுக்கவும்அவர் ஒத்துக்கொண்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களில் பெரும்பாலோர் தமிழர்களாக இருப்பதால், அப் பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதில்லை என்றும் அவர் ஒப்புக்கொண்டார் அப்போது பதவியாவில் சிங்களவரைக் குடியேற்றுவதற்கு சி. பி. டி. சில்வா திட்டமிட்டிருந்தார். எமக்கு முன்னால் அத்திட்டத்தை நிறுத்தும்படி திரு. பண்டாரநாயக்கா சி. பி. டி. சில்வாவுக்கு உத்தரவிட்டார். ஆனால் சி. பி. டி. சில்வாவோ அதை நிறுத்துவதற்கு காலங் கடந்துவிட்டதாக அறிவித்தார்.

தைத் தடுப்பதும், அப்பிரதேச நிர்வாகத்தை மாநில சபைகள் மூலம் நிர்வகிப்பதுமே ஒப்பந்தத்திலுள்ள இரண்டு முக்கிய அம்சங்களாகும்.

பண்டாரநாயக்காவுக்கும் எமக்குமிடையே ஏற்பட்ட பொருத்தத்தைச் சிங்கள மக்கள் விரும்பவில்லை. அவர்கள் அவரது வீட்டை முற்றுகையிட்டு அந்தப் பொருத்தத்தை நிராகரிக்கும்படி வற்புறுத்தினார்கள். திரு. பண்டாரநாயக்கா மக்களின் செல்வாக்கை விரும்பும் ஒரு மனிதர், எனவே மறுகன்னையைச் சேர்ந்த எம்மோடு ஆலோசிக்கக் கூட முன்வராது எம்முடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார். ஆக, பண்டாரநாயக்கா செல்வநாயகம் உடன்படிக்கை எழுதப்பட்ட ஆறே ஆறுமாதத்துக்கிடையில் அது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.


இரண்டாவது தடவை வேறு விதமான குழுவினருடன் உடன்படிக்கை செய்தோம். 1965 ஆம் ஆண்டு ஐ. தே. கட்சியினருடன் ஒரு பொருத்தம் எழுதினோம். டட்லி சேனநாயக்காவுடைய கட்சிக்கும் எமது கட்சிக்குமிடையேஉடன்படிக்கை எழுதப்பட்டது. மாவட்ட சபைகளை வழங்க அவர் உடன்பட்டார். அரசாங்கத்தை அமைப்பதற்கு எமது ஆதரவை அவர் கோரினார்.

ஆனால் திரு டட்லி சேனநாயக்காவினாலும் உடன்படிக்கையைச் செயற்படுத்த முடியாமற் போய் விட்டது. ஐந்தாண்டுகள் திரு. டட்லி சேனநாயக்கா இந்நாட்டை ஆட்சி புரிந்தும். அவரின் மீது நிர்ப்பந்தம் கொண்டு வரப்பட்டதால் அவரால் தமது வாக்குறுதியைக் காப்பாற்ற முடியவில்லை.

இலங்கைத்தீவில் அரசாங்கங்களின்மீது நெருக்கடியையும் நிர்பந்தத்தையும் மக்கள் ஏற்படுத்துவது ஒரு வழக்கமாகிவிட்டது. எனவே டட்லி சேனநாயக்காவின் மீது ஏற்பட்ட நிர்ப்பந்தம் காரணமாக, மாவட்ட சபைகளை நிறுவுவது புத்திசாலித்தனமானதல்ல என்று அவர்கருதினார். எனவே சிங்கள அரசாங்கத்தின் தலைவருடன் இரண்டாவது முறையாக நாங்கள் செய்து கொண்ட உடன்படிக்கையின் தலைவிதியும் இப்படியாக முடிந்து விட்டது நான் பங்கு பற்றிய இரண்டாவது

இருபிரமுகர்களும் இறந்து விட்டனர். நடந்த நிகழ்வுகளை எடுத்துக் கூறுவதற்கு நான் ஒருவன்தான் உயிருடன் இருக்கிறேன்.

இப்போது பிரச்சினைகளைப்பற்றி மறுபடியும் பேசித்தீர்ப்போம் என்று திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்காகூறுகிறார். இப்படியான பேச்சுவார்த்தைகளால் எமது பிரச்சினைக்குதீர்வு காண



தந்தை செல்வா

களக்கட்சியின் தலைவரும் சிறந்த பண்பாளரும், சிங்கள மக்களின் பெருந்தலைவருமான திரு, டட்லி சேனநாயக்கா தமிழ் மக்களுக்கு மாவட்ட சபைகளை வழங்க இணங்கினார். இந்த உடன்படிக்கைகள் யாவும் கிழித்தெறியப்பட்டுவிட்டன; அவை கௌரவிக்கப்பட வில்லை.

தமிழ்த் தலைவர்களுடன் எந்த ஒரு உடன்பாட்டுக்குச் சிங்களத் தலைவர்கள் வந்தாலும், அதனைச் சிங்கள மக்கள் எதிர்த்து அழிப்பார்கள்.

தமிழ் பேசும் மக்களின் இழந்த இறைமையை மீண்டும் நிலைநாட்டும் நோக்குடன் நாம் ஒரு காலத்தில் - இணைப்பாட்சி இயக்கத்தை ஆரம்பித்தோம். இணைப்பாட்சி மூலம் எமது இலட்சியத்தையடைய முடியாது என்பதை இன்று கண்டு கொண்டோம். இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாம் ஒரு முடி

> தந்தைசெல்வா அவர்கள் அமரராவதற்கு முன் கடைசியாக பாராளுமன்றத்தில் 1976 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி தமிழ் மக்களின் சார்பில் நிகழ்த்திய உரை இது.

முடியாது ஏனென்றால் நாம் நமது பிரச்சினைகளையிட்டு திருப்பித்திருப்பி அவர்களுடன் பேசிவிட்டோம் அவர்கள் எங்களது சில அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்கவும். வழங்கவும் மறுத்து விட்டார்கள்.

சிங்கள மக்கள் அவர்களது தலைவர்களை எம்முடன் எந்த ஒரு தீர்வுக்கும் வருவதற்கு அனுமதிக்கப் போவதில்லை. அதனால் எமது பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது என்ற கேள்விக்கே இடமில்லை, தமிழ் பேசும் மக்களுக்கு அவர்களது உரிமைகளை வழங்கக்கூடிய வகையில் எழுதப்பட்ட உடன்படிக்கைகள் யாவும்: இறுதியாகக் கிழித்தெறியப்பட்ட கசப்பானபாடத்தை நாம் படித்திருக்கிறோம்.

மாபெரும் சிங்களத் தலைவரும் சிறந்த பண்பாளருமான காலஞ் சென்றதிரு. பண்டார

வுக்கு வந்திருக்கிறோம்: அதாவது நாம் தனியாகப் பிரிய வேண்டும். அப்படிப் பிரியாவிடின் தமிழ்பேசும் மக்கள் தமது இழந்த உரிமைகளை மீளப் பெறவே முடியாது.

எமது மூதாதையர்கள் மதிநுட்பம் உள்ளவர்கள்; அவர்கள் தமக்கென ஓர் சொந்த அரசை வைத்திருந்தார்கள். இலங்கையின் வரலாற்றில் எமக்கும் ஓர் இடம் இருந்தது. நாம் நாட்டுப் பிரிவினை கோரவில்லை - எமது இழந்த இறைமையை மீளப் பெறுவதற்கே எமது இயக்கம் முயற்சிக்கிறது.

போர்த்துக்கீயர் வந்தபோது, இலங்கையில் மூன்று அரசுகள் இருந்தன. ஒன்று கண்டி அரசு, அது போர்த்துக்கீயரால் கைப்பற்றப்படவில்லை. இதைவிட வேறுஇரு அரசுகள் இருந்தன. தமிழீழப் பிரதேசங்கள் யாழ்ப்பாண அரசினால் ஆளப்பட்டன.

எமது இயக்கம் ஒரு தனி நாட்டை உருவாக்கும் இலட்

சுலபமான காரியமல்ல என்பது எமக்குத் தெரியும். அது விலங்கமானது என்பதும் எமக்குத் தெரியும். ஆனால் நாம் ஒன்றில் சிங்களப் பொதுமக்களின் அதிகாரத்துக்குள்ளிருந்து விடுபட வேண்டும்; அன்றேல் அழிந்துவிடவேண்டும். அதுவே யதார்த்தமானது. எனவே முழுமூச்சுடன் உழைத்துத் தனிநாடு அமைப்போம்.

இணைப்பாட்சிக் கோரிக்கையை நாம் கைவிட்டுவிட்டோம். எமது இயக்கம் முழுவதும் அஹிம்சை அடிப்படையில் அமைந்ததாகவே இருக்கும். எமது கோரிக்கை நியாயமானது என்பதால் வருங்காலத்தில் ஒரு சிங்கள அரசாங்கம் எமக்கு விடுதலையை வழங்கியே தீரவேண்டிய நிலைமை ஏற்படும்.

உலகில் பல நாடுகளின் அரசுகள் சிறு தேசிய இனங்களின் உரிமைகளை மறுதலித்து வந்திருக்கின்றன. அயர்லாந்தை ஆட்சிபுரிந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர் அயர்லாந்து மக்களுக்கு முடிவில் சுதந்திரத்தை வழங்க மறுத்தனர். ஆனால் பல நூற்றாண்டு காலமாக அயர்லாந்து மக்கள் நடத்திய போராட்டத்தின் பின்னர் அயர்லாந்து மக்களுக்கு சுதந்திரம் வழங்குவதற்கு பிரிட்டிஷ் அரசு முன்வந்தது. இன்று அயர்லாந்து விடுதலைபெற்ற ஒரு நாடு.

அதேபோலவே நாங்களும் சுதந்திர நாட்டைக் கோருகிறோம். இக் கோரிக்கைக்கு இணங்க மறுப்பதற்கு சிங்கள மக்களுக்கு எதுவித நியாயமும் கிடையாது. சிங்கள மக்கள் என்றோ ஒரு நாள் எமது கோரிக்கையை அங்கீகரித்தேயாக வேண்டும். தீவின் ஏனைய பகுதிகளிலிருந்து பிரிந்து சென்று நாம் ஒரு சுதந்திர அரசை நிறுவுவோம்.

இந்த நிதிநிலை அறிக்கை (பட்ஜட்)சிங்கள மக்களுக்குரிய நிதிநிலை அறிக்கையாகும். தமிழ் மக்களுக்குரிய கொடுப்பனவுகளை அவர்கள் இதிலே கொடுக்கவில்லை.

நேற்றும் இன்றும் இச்சபையிலுள்ள எமது நல்ல நண்பர்கள் எமது கட்சியின் தனி நாட்டுக் கொள்கையைப்பற்றி விவாதித்தார்கள். தனி நாட்டை நிறுவுவதுதான் எமது கட்சியின் ஒரேயொரு நிலைப்பாடு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எமது உரிமைகளை நீங்கள் வழங்க மறுத்து விட்டீர்கள்; எம்மை உலகில் ஒரு சுதந்திர இனமாக வாழவும் விடுகிறீர்களில்லை, எனவேதான் தமிழ் மக்களாகிய நாம் எமது தனி நாட்டை நிறுவி அதன் மூலம் எமது உரிமைகளைப் பாது

விடுதலைப்புலிகள் கடற்கண்ணிகளை கடலில் வைப்பதானால் ஒரே தடவையில் எட்டுப் படகுகளில் 27 பேர் சென்று வைப்பதாகக் கூறுவது ஒரு கற்பனையாகும் அவ்வாறு தான் எட்டுப் படகில் 27 பேருக்கு மேல் சென்று கடற்கண்ணியை வைத்திருப்பின் புலிகள் தம் மீது கடற்படை தாக்குதல் தொடுத்த போது எதிர்தாக்குதல் நடத்த முடியாமல் கொல்லப்பட்டார்கள் என்பது அதைவிடக் கற்பனையாகும். அதாவது புலிகள் எதுவித தற்பாதுகாப்பு நடவடிக்கையுமின்றி இறந்தார்கள் என்பது.

இந்நிலையில், கடற்படை மேற்கொண்ட இத்த க்குதலானது. திட்டமிட்டு பௌத்த பிக்குகளின் சமாதான நல்லெண்ண முயற்சியில் முட்டுக்கட்டை போடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்பதில் ஐயம் எதுவுமில்லை. தமிழ் மக்கள் தொடர்ந்தும் கொல்லப்பட்டால், தமிழ் மண் மீது பாரிய படையெடுப்பை மேற்கொண்டால் சமாதானத்திற்கான கதவுகள் மூடப்படும் என விடுதலைப்புலிகள் திட்டவட்டமாக ஏற்கனவே அறிவித்துள்ளார்கள். இந்நிலையில் தமிழ் மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதன் மூலம் விடுதலைப் புலிகளை சீண்டி பேச்சுவார்த்தையையும் சமாதான முயற்சிகளையும் குழப்பியடிக்கவும், பழியைப் புலிகள் மீது போடவும் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வை நோக்கி நகரவும் இராணுவ வட்டாரங்கள் திட்டமிட்டுச் செயற்படுகின்றன.

ஆனால் சிறிலங்கா இராணுவத்தினரின் திட்டமிட்ட இச்செயல் முறை விடுதலைப் புலிகளாலும் தமிழ் மக்களாலும் உணர முடியாத தொன்றல்ல. ஆனால், இராணுவத்தினரின் இவ் அடாவடித்தனத்தை விளங்கிக் கொண்டமைக்காக இது இராணுவத்தினரின் சதித்திட்டம் என விட்டுக்கொடுத்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பது தமிழருக்கு ஒரு கட்டாயமும் அல்ல ஆனால் நந்நோக்கில் பிக்குகளை புலிகள் வரவேற்றுள்ளனர் ஆனால் இவ்வாறான விட்டுக்கொடுப்பால் நன்மைஏதும் விளைந்துவிடப்போவதுமில்லை ஏனெனில், இராணுவம் இன்று ஒரு பலம் பொருந்திய அமைப்பாக இருப்பதனால், இனப்பிரச்சினையில், அதன் செல்வாக்கு பலமானதாகும். சிலவேளை சிறிலங்கா அரசாங்கத்தின் பலத்தை விடவும் அதிகமானதாகும். இதனால் இராணுவத்தின் உடன்பாடு தீர்விற்கு அவசியம்.

இந்நிலையில், நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு வந்திருக்கும் பௌத்த பிக்குகள் இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஒரு சுமுகமான அரசியல் தீர்வு ஒன்றை நாடவிரும்பின் முதலில் இராணுவத்தினரின் அடாவடித்தனங்களையும் படுகொலை நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும். பேச்சுவார்த்தைக்காக இராணுவத்தினரின் படுகொலைகளைக் கண்டுகொள்ளாமலோ அன்றி சகித்துக் கொள்ளுமாறு தமிழர்களைக் கோருவதோ அன்றி எதிர்பார்ப்பதோ அழகுமல்ல. அது சமாதான தீர்விற்கு இட்டுச் செல்லக் கூடியதுமல்ல.

---

அதை நிறுத்துவதற்கு காலங் கடந்துவிட்டதாக அறிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றத்

யாக முடிந்து விட்டது நான் பங்கு பற்றிய இரண்டாவது ஒப்பந்தம் இதுவாகும்.

என்னுடன் மேற்படி உடன்படிக்கையில் கையெழுத்திட்ட

வ்ரும் சிறந்த பணியாளருமான காலஞ் சென்றதிரு. பண்டார நாயக்கா தமிழர்களுக்கு மாநில சபைகளை வழங்க இணங்கினார். மற்றோர் சிங்

எமது இயக்கம் ஒரு தனி நாட்டை உருவாக்கும் இலட்சியத்தை முன்வைத்து அதற்காக இயங்குகிறது. ஒரு தனி நாட்டை அமைப்பதென்பது

நாட்டை நிறுவி அதன் மூலம் எமது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிக்கிறோம் இதை இச்சபையிலே நான் தெளிவாக்கியுள்ளேன்.

---

விண்வெளி தொழில் நுட்பங்கள்

# இந்தியாவிற்கு விற்பனை செய்வது அமைதி நோக்கத்திற்காகவே

## ரஷ்யா விளக்கம்

(மொஸ்கோ)

செயற்கைக் கோள்களை செலுத்துவதற்கான ராக்கெட் நுடபத்தை இந்தியாவிற்கு விற்பனை செய்வது அமைதி நோக்கத்திற்காகவே என்பது குறித்து அமெரிக்காவுடன் நிபுணர்கள் அளவில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ரஷ்யா வலியுறுத்துகிறது.

மொஸ்கோவில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மாநாட்டில் ரஷ்ய வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி பொரிஸ்யெல்சின் இந்த மாதம் 9 ஆம் திகதி பிறப்பித்த தீர்மானம் ஒன்றினால் ராக்கெட் நுட்பம் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது நெடுநளைக்கு நீடிக்காது என்று அந்த அதிகாரி கூறினார்.

ரஷ்ய ராக்கெட் நுட்ப அறிவை ஆக்கப்பணிகளுக்கு பயன்படுத்துவதாகவும், மூன்றாம் நாடுகளுக்கு அவற்றை விற்பதில்லை என்றும் இந்தியா அளித்த வாக்குறுதிகளில் ரஷ்யா நம்பிக்கை வைத்துள்ளது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதே நேரம் பேராசிரியர் யூ ஆர். ராவ் தலைமையிலான இந்திய விண்வெளி ஆராய்ச்சி தாபனக் குழு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்த நுட்பத் தகவல் ஒப்பந்தத்தை மீண்டும் செயல்படுத்துவது குறித்து விவாதித்து வருவதாக மொஸ்கோவில் இந்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக இந்தியப் பத்திரிகைகள் அமெரிக்காவின் எதிர்ப்பை அடுத்து இந்தியாவிற்கு விண்வெளித் தொழில் நுட்பத்தை வழங்க ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ்யெல்சின்மறுத்து விட்டதாக செய்தி வெளியிட்டிருந்தது. அத்துடன் இது தொடர்பான விவாதமும் இந்திய மக்களவையில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# அரபுநாடுகள் ஒன்றுபட்டு செயல்படவேண்டும் -யாஸிர் அரபாத்

புதிய உலகின் அமைப்பில் அரபுநாடுகள் ஐக்கியத்துடன் செயல்படவேண்டுமென்று கடந்த ஞாயிறன்று மௌரிடோனியா தலைநகருக்கு பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் விஜயம் செய்தபோது தெரிவித்தார்.

மௌரிடோனியாவின் தலைவராக சனியன்று பதவி நீடிப்பு கிடைத்த அந்நாட்டின் தலைவர் முசுலியா ஒவ்ல்ட் சித் அஹமத் தயாவை அரபாத் வாழ்த்தினார்.

வட ஆபிரிக்க மட்றீட் நாடுகள் அமைப்பு, மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள், லிபியாவுக்கு எதிரான ஐ. நா தடை உத்தரவு ஆகியன பற்றி பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாகத் தெரிகிறது.

# மூன்று மாத காலத்துக்குள் யெல்சின் பதவி விலகுவாராம்

(மொஸ்கோ)

ரஷ்சிய ஜனாதிபதி பொரீஸ் ஜெல்சின் தாம் இன்னும் மூன்று மாதங்களுக்குள் பதவியை விட்டு விலகப் போவதாக தெரிவித்துள்ளார்.

அவர் தமது அமைச்சரவையில் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இதத்கிடையில் ரஷ்யாவில் பெற்றோலின் விலையேற்றம் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. 70 வருட சோவியத் ஆட்சியில் அனுபவிக்காத துன்பங்களை தற்போது ரஷ்சிய மக்கள் அனுபவித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குர்திஷ் பகுதியிலிருந்து

# ஈராக்கிய இராணுவம் திரும்புவதாக அமெ. ஊகம்

(வாஷிங்டன்)

ஈராக்கிற்குவடக்கே குர்திஷ் பகுதியில் பெருமளவு இராணுவத்தையும், ஆயுதங்களையும் குவித்திருந்த ஈராக் அவற்றை வாபஸ் பெறுவதாகத் தோன்றுகிறன என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

குர்திஷ் பகுதியிலிருந்து விமான எதிர்ப்பு ஏவாயுதங்களை வாபஸ் பெற்று நேச தேச விமானங்களை ராடர் மூலம் கண்காணிப்பதை நிறுத்தாவிடில் பலாத்காரம் பிரயோகிக்கப்படும் என நேச நாடுகள் எச்சரித்த மறுதினம் இந்த வாபஸ் ஆரம்பமாகியதாகவும்,

அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஈராக்கின் ஐ. நா. தூதரிடம் இந்த எச்சரிக்கையை வாய் மூலமாகவும் குறிப்பின் மூலமாகவும் கொடுத்தனர் என்றும் தெரிவிக்கட்படுகிறது.

கிளர்ச்சிக்காரர்கள் வசமுள்ள பகுதிகளில் வசிக்கும் குர்திஷ் மக்கள் மேற்கு நாடுகளின் பாதுகாப்பில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டுக் கரையில் மீன் பண்ணைகள்

(சென்னை)

தமிழகத்தின் தென்பகுதி கரையோர மீனவர்களுக்கு என ஏழரைக் கோடி ரூபாய் செலவில் அப்பகுதியில் மீன் பண்ணைகள் அமைக்கப்படும் என்றும், இவற்றின் மூலம் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர் பாதுகாப்புப் பெறுவர் என்றும் தமிழக மீனவர் நலத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

தமிழக சட்டசபையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# சுவீடன் ராஜதந்திரி வெளியேற்றம்

(ஸ்டொக்ஹொல்ம்)

சுவீடன் ராஜதந்திரி ஒருவரை லிபியா ஞாயிறன்று வெளியேற்றியது. இப்பெண்மணி பிரத்தியேக விஜயமொன்றை மேற்கொண்டு லிபியத் தலைநகரான திரிபோலி சென்றிருந்தாரென சுவீடன் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

ஐ. நா. பாதுகாதுப்பு தடை உத்தரவுக்கேற்ப ஒவ்வொரு நாடுகளும் அங்குள்ள லிபிய தூதராலய அதிகாரிகளைக் குறைத்து லிபியாவுக்கு திருப்பி அனுப்ப வேண்டுமென்பது வேண்டுகோள்.

சுவீடன் அவ்விதம் நடந்து கொண்டதால் லிபியாவும் எதிர்நடவடிக்கை எடுத்ததாக கூறப்படுகிறது.

ஈழநாதம்

## இலங்கையர் விரும்பினால் சிரமமின்றித் திரும்பலாம்

(கொழும்பு)

லிபியாவில் தங்கியுள்ள இலங்கையர்கள் இலங்கை திரும்ப விரும்பினால் அவர்கள் எவ்வித பிரச்சினையுமின்றி இலங்கை வரமுடியுமென இலங்கை - லிபிய மற்றும் எகிப்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் அவ்வாறு வருவதற்கு லிபியாவிலிருந்து வீதி மார்க்கமாக கெய்ரோ சென்று பின்னர் அங்கிருந்து விமான மூலமாக தாயகம் திரும்ப முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லிபியாவிலுள்ள இலங்கையர்கள் தாயகம் திரும்ப விரும்பினால் அவர்களுக்குரிய சகல உதவிகளையும் வழங்கவேண்டுமென லிபியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு இலங்கை அரசால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. உஇதேவேளை லிபியாவில் வள இலங்கையர்கள் விருப்பப்படி தொழில் புரியவோ தாயகம் திரும்பவோ அனுமதி வழங்கப்படும் என லிபிய தூதரக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஐ நா. சபையின் தடையால் இராணுவ தளபாடங்கள் மட்டுமே தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகத்தில் எதுவித பாதிப்பும் இல்லை எனவும் வெளியுறவு அமைச்சு பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## தோட்டங்கள் தனியார் மயம் ஆக்கப்படாது

(கொழும்பு)

அரச தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது என அரசாங்க அதிகாரி ஒருவர் உறுதியளித்துள்ளார்

அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது என்றும், இத்தோட்டங்களின் உரிமை அரசாங்கத்திடமே தொடர்ந்தும் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்

## தொண்டர் ஆசி. பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களுக்கான பொதுக் கூட்டமொன்று எதிர்வரும் ஞாயிறன்று காலை ஒன்பது மணியளவில் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் இருக்கும் பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் வடபகுதியில் கடமையாற்றிவரும் அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

அத்துடன் திங்கட்கிழமையன்று அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் தத்தமது விபரங்களை பட்டப்படிப்புகள் கல்லூரியில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

### கலந்துரையாடல்

யாழ்ப்பாண கோட்டக் கல்விப்பிரிவு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளியன்று மாலை மூன்று மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரும் தவறாது சமூகம் தரும்படி யாழ். கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஆப்கான் இடைக்கால அரசு அரசியல்கட்சிகளின்றி அமையலாம்?

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அனைத்து அரசியல் கட்சிகளும் போராளித் தரப்புக்களும் இணைந்த இடைக்கால அரசு உடனடியாக அமையத் தவறினால் அரசியல் கட்சிகள் அல்லாத போராளி அமைப்புகளைச் சேர்ந்த அரசு ஒன்றைப் போராளிகள் அமைக்கக் கூடும் எனத் தெரிய வருகிறது.

ஐ நா. பிரதிநிதி இது குறித்து ஆலோசனைகள் நடத்தி வரும் அதே வேளையில், போராளிகள் மேலும் பல பகுதிகளைத் தம் வசப் படுத்தி தமது கட்டுப்பாட்டைத் தீவிரப் படுத்திக் கொண்டுள்ளனர்.

இதற்கிடையில் ஆப்கான் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சித்து வரும் ஐ. நா சபையின் பிரதிநிதி முக்கிய ஆப்கான் போராளித் தலைவர் ஷாக் மசூத்தைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். ஐ. நா. சபையின் பிரதிநிதி ஷாக்கைச் சந்தித்திருப்பது இதுவே முதல் முறையாகும். தலைநகர் காபூலைத் தாக்க வேண்டாம் என்று மசூத் தமது படைக்கு உத்தரவிட்டிருப்பதாக தெரிவிக்கப் படுகிறது

## நஜிபுல்லாவை வெளியேற்ற ஐ. நா. முயற்சி தோல்வி

(காபூல்)

ஆப்கானிஸ்தானை விட்டு முன்னாள் அதிபர் நஜிபுல்லாவை பாதுகாப்பாக வெளியே அனுப்புவதற்காக ஐ நா. சிறப்புத் தூதுவர் எடுத்த முயற்சிகள் வெற்றியடையவில்லை எனத் தெரிய வருகிறது.

காபூலில் விமான நிலையத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் முஜாகிதீன் தலைவரான ஜெனரல் ரசீத் நஜிபுல்லாவைவெளியேற்றுவது பற்றிய ஐ. நா. சிறப்புத் தூதுவரின் கோரிக்கையை நிராகரித்துவிட்டார்.

நஜிபுல்லாவிற்கு எதிரான போர்க் குற்றங்களை விசாரிக்க வேண்டுமென திரும்பத் திரும்ப கூறிவரும் ரசீத் ஆப்கானிஸ்தானில் பொதுக் கருத்து அடிப்படையிலான அரசு ஒன்று அமையவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

## புதுடில்லியில் பூட்டர்ஸ்காலி

(டில்லி)

இந்தியா வந்துள்ள ஐ நா. சபையின் பொதுச் செயலளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ் ஹாலி பிரதமர் பி வி. நரசிம்மராவ், வெளியுறவுத் துறைத் துணை அமைச்சர் எட்வேட் பெர்னாண்டோ, வெளியுறவுத் துறைச் செயலாளர் டிக்சிற் ஆகியோரைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார்

மாறிவரும் ஆப்கான் நிலைமை காஷ்மீர் போராளிகளின் தன்னாட்சிப் பேரர் குறித்தும் இந்தியத் தலைவர்களுடன் ஹாலி அதிகமாகப் பேசினார் என்று கூறப்படுகிறது.

## இன விகிதப்படி நியமனம்

இலங்கை ரயில்வே திணைக்களத்தின் கீழ் ரயில் சாரதிகள் இன விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களவர் 75 சதவீதம் தமிழர் 12.7 சதவீதம், முஸ்லிம்கள் 8 சதவீதம். இந்திய வம்சாவழியினர் 5.5 சதவீதம் என்ற அடிப்படையில் இவர்களை சேர்ந்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் .

க. பொ. த. சா தாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தகவல், பேட்டிகள் வழங்குவதை தவிர்க்குக

(யாழ்ப்பாணம்)

கல்வி அலுவலகத்தில் மற்றும் கிளைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், ஆசிரியர்கள் அதிபர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்தல், பேட்டியளித்தல் ஆகியவற்றைத் தவிர்த்துக்கொள்ளுமாறுயாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஆர் சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

அரச உத்தியோகத்தர் எவரும் பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் கட்டுரைகள், எழுதுதல், நிருபர்களுக்கு பேட்டியளித்தல், திணைக்களத்தை விமர்சித்தல் பிரசாரம் செய்தல், தத்தம் குறைகளை வெளியிடுதல் ஆகிய கருமங்களில் ஈடுபடலாகாதெனத் தாபனக் கோவை XXXI அத்தியாயம் 3 : 2 பந்தியிற் கூறப்பட்டுள்ளது என்றும், இதற்கமைய சகல உத்தியோகத்தர்களும் செயற்படுமாறு பிரதேசக் கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார். இதனை மீறுமிடத்து சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

## அகாலி தளத் தலைவர்கள் புதுடில்லியில் கைது

(டில்லி)

புதுடில்லியில் அமைதிக்கு ஊறு விளைவிக்கும் என்ற அச்சத்தின் காரணமாக ஏழு அகாலி தளத்தலைவர்கள் புதுடில்லிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் சிம்ரஞ்சித்சிங் மான்பிரகாஷ்சிங் பாதல் குருசரண்சிங் தோரா ஆகியோரும கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர். தற்போது புதுடில்லி வந்திருக்கும் ஐ நா. பொதுச்செயலாளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ் காலியை சந்தித்து மகஜரொன்றைக் கையளிக்கவேமுயன்றதாகவும் அப்போதே கைது செய்யப்பட்டதாகவும் அகாலிதலைவர்கள் கூறியுள்ளனர்.

ஐ.நா. தலைமைச் செயலாளரை சந்திக்க விடாமல் அகாலி தளத்தலவர்களைத் தடுப்பதற்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டதாக கூறியுள்ள அகாலி தளப் பேச்சாளர் ஒருவர் பஞ்சாப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசுக்கு அக்கறையில்லைஎன்பதை இது காட்டுவதாகவும் தெரிவித்தார் அவர்மேலும் கூறுகையில் ஈராக்கில் 'குர்த்' இனத்தவர் பிரச்சினையில் ஐ. நா. தலையிட்டது போலவே பஞ்சாப் பிரச்சினையிலும் குறுக்கிட வேண்டுமெனவும் அகாலிதளத் தலைவர்களின் மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

## இராணுவ வெற்றி அவசியம் அரசியல் தீர்வு தேவை

-காமினி ஜெயவிக்கிரம பெரேரா

(குருநாகல்)

இராணுவ வெற்றி அவசியமென்றாலும், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த உடனடியாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று வடமேற்கு மாகாண முதலமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்தார்.

நாட்டு மக்களின் உயிர்களை இழக்காமல் ஒரு மாநாட்டு மேசையில் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடலாம் என்று அவர் கூறினார்.

ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கென குருநாகலில் மல்பிட்டிய என்ற இடத்தில் அமைக்கப்படவிருக்கும் கட்டடக் கல் நாட்டு விழாவில் பேசும்போது அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### சமாதான

களையும், குரோதத்தையும் வளர்ப்பதாகவுள்ளன எனவும்

## மூவர் பலி

கால்வாய் அமைப்புக்கென நிலத்தைத் தோண்டிக் கொண்டிருந்தபோது கட்டடம்சரிந்து விழுந்தமையால் மூவர் உயிரிழந்தனர். மற்றும் பலர் காயமடைந்த நிலையில் கொழும்பு வைத்தியசாலையில்அனுமதிக்கப் பட்டனர். கொழும்பு கிருலப்பனை பகுதியில் இச் சம்பவம் நேற்று இடம் பெற்றது. இது பற்றி மேலும் புலன்விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக கொழும்பு மாவட்டப் பொலிசார் கூறியுள்ளனர்.

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் மேற்குப்பிரிவின் கழகங்களுக்கான போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு திருமலை நட்

## வேலணைக் கோட்டம் ஆசிரியர் சுயவிபரக் கோவை மீள தயாரித்தல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்போது இயங்கும் வேலணைக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் அறுநூறுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் சுயவிபரக் கோவையை மீளவும் தயாரிக்கும் பணியை வேலணைக் கோட்டக் கல்விப் பணிமனை ஆரம்பிக்கவுள்ளது. தீவகப் பகுதி இராணுவ நடவடிக்கையின் போது சுயவிபரக்கோவைகள் காணாமற் போனதையடுத்தே இந்த நடவடிக்கை

வேலணைக் கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் சம்பளம் வழங்கப்படும் அனைத்து அதிபர், ஆசிரியர்களையும், இளைப்பாறியும் ஒய்வூதியம் பெறாதவர்களையும் வரும் 27ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சென்ஜோன்ஸ் அக்கடமியில் சமுகமளிக்குமாறு வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி புலேந்திரன் கேட்டுள்ளார். சுயவிபரக் கோவையை மீள அமைப்பது தொடர்பான அறிவுறுத்தல் இக் கூட்டத்தில் வழங்கப்படவுள்ளது.

### புலிகளை

வெளியுறவு அமைச்சும் கருதுகின்றன. வேறுநாடுகளில் இயங்கும் இயக்கம் ஒன்றை தடை செய்ய வேண்டுமானால் நம்முடைய பயங்கரவாதச்

## முல்லை மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது ஆயிரத்துநூறு ஆசிரியர்கள் பணிபுரியவேண்டிய இடத்தில் தற்போது எழுநூறு ஆசிரியர்களே உள்ளனர்

லைகளில் இருபத்தேழாயிரம் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இங்குள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாணச் செயலாளரை முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் கே. சுப்பிரமணி

## மட்டக்களப்பில் இதுவரை

தடை செய்ய வேண்டுமானால் நம்முடைய பயங்கரவாதச் சட்டத்தை திருத்த வேண்டுமென சட்ட அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை தடை செய்வதை விட அவர்களது நடவடிக்கையையே தடை செய்யவேண்டும் எனவும், இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த தயாராகும் போது இந்திய அரசு தடை செய்வது பொருத்தமாக இருக்குமா எனவும் உயரதிகாரிகளிடையே கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதே வேளை விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதிக்கப்படும் தடையை தமிழகத்தில் ஆளுங்கட்சி தன்னுடைய அரசியல் எதிரிகளுக்கு எதிராக பயன்படுத்தும் வாய்ப்பும் உள்ளது என உள்துறை அமைச்சு கவலை தெரிவித்துள்ளது.

அத்துடன் விடுதலைப் புலிகளை தடை செய்வதால் கிடைக்கும் நலன்களையும் ஏற்படும் நஷ்டங்களையும் கணக்கிட்டுப் பார்த்தால் நஷ்டங்கள் தான் அதிகமாக இருக்கும் என மூத்த அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்..

தில் தற்போது எழுநூறு ஆசிரியர்களே உள்ளனர்

இம் மாவட்டத்தில் உள்ள தொண்ணூற்றியேழு பாடசாலைகளை முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் கே. சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

### இலங்கை மத்திய வங்கி

# ஆளுநர்மீதானகுற்றச்சாட்டு; ஆதாரமற்றவையாம்

(கொழும்பு)

இலங்கை மத்தியவங்கி ஆளுநருக்கு எதிராக செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பற்றி சிறிலங்கா பிரதமரும். நிதியமைச்சருமாகிய டி.பி விஜயதுங்கா அறிக்கையொன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

செய்திகளாகவும். ஆசிரிய தலையங்கங்களாகவும் வெளியிடப்பட்ட சில குற்றச்சாட்டுக்கள் தவறான காரணங்களை அடிப்படையாகக் கொண்டும், சட்டநடைமுறைகள் பற்றிய அறிவு இல்லாத விதத்திலும் எழுதப்பட்டுள்ளன என்று விஜயதுங்கா அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### பௌத்த

குழுவினர் ஏனைய தமிழ் அரசியல் குழுக்களின் கருத்தையும் அறிவதில் ஆர்வம் காட்டியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். ஆனால் இவர்கள் முஸ்லிம்களின் கருத்தை அறிய முற்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

# மட்டக்களப்பில் இதுவரை 7000தமிழரை காணவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்ட தமிழர்களின் நிலை பற்றி தகவலறியச் சென்ற உறவினர்களிடம் இராணுவத்தினர், தாம் பிடிக்கவில்லை எனக் கூறியுள்ளனர் அத்துடன் விடுதலைப்புலிகள் தான் அவர்களைப் பிடித்திருப்பார் எனக் கூறி உறவினர்களை விரட்டுகின்றனராம்.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மட்டக்களப்பு கிரான் குளம் பகுதியில் வயலில் அறுவடையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் பற்றி இதுவரை தகவல் ஏதும் உறவினர்களுக்கு கிடைக்கவில்லை.

1991 ஜனவரி, பெப்ருவரி மாதங்களில் இராணுவத்தினர் நடத்திய பச்சைப்பட்டி இராணுவ நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட இருபத்தைந்து தமிழர்களது விபரங்களும் அவர்களது உறவினர்களுக்கு கிடைக்கவில்லை.

இவ்வாறாக இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்ட அல்லது சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை ஏழாயிரத்துக்கும் அதிகமாக இருக்கும் எனத் தெரியவருகின்றது.

### விமானம் மூலம் அகதிகள்

# பாதுகாப்பின்மையினால் திட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

தமிழகத்தில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை விமானம் மூலம் ஏற்றிவரும் இந்திய அரசின் தீர்மானம் சீனன்குடா விமான நிலையத்திலுள்ள பாதுகாப்பின்மை காரணமாக ஒத்திப் போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சீனன்குடா விமானத் தளத்தில் இந்திய விமானம் தரையிறங்குவதற்கு பாதுகாப்பு நடவடிக்கை அதிகரிக்கப்படவேண்டியதன் அவசியம் குறித்து இந்திய அதிகாரிகள் இலங்கை வெளியுறவு அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதே ஒத்திப் போடப்பட்டதற்கு காரணம் என்றும் கூறப்படுகிறது.

இலங்கை வெளியுறவு அமைச்சு இந்த விடயத்தை பாதுகாப்பு சபையின் கவனத்திற்கு சமர்ப்பித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேநேரம் விமானம் மூலம் வருவது தடைப்பட்டுள்ளதால் வர விருந்த அறுநூறு தமிழ் அகதிகளும் இன்று ராமானுஜம் கப்பல் மூலம் தலைமன்னாருக்கு வரவுள்ளனர் என்றும்,

தொடர்ந்து 25 ஆம், 29 ஆம் திகதிகளில் ராமானுஜம் கப்பல் மூலம் அகதிகள் தலைமன்னார் வருவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### இவ் வருட

னரீ எண்ணிக்கை அதிகரித்தமையினைத் தொடர்ந்து பழைய பாராளுமன்றம் கைவிடப்பட்டு புதிய பாராளுமன்றம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது என்றும் தெரிவித்தார். பத்தாண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக மரம் நடுகைத் திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வைபவத்தில் சபாநாயகர் எம்.ஏச். முகமது சபை முதல்வர் ரணில்விக்கிரமசிங்க முன்னாள் சபாநாயகர் ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## சிறுபோகம் பாதிப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதியில் நீர்த்தட்டுப்பாடு காரணமாக சிறுபோக வேளாண்மைச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### வங்கி

மறுத்தால் பொதுவேலை நிறுத்தம் ஒன்றையும் மேற்கொள்ளவுள்ளனர்.

கொமர்ஷல் வங்கி, ஹட்டன் நாஸனல் வங்கி, சாட்டற் வங்கி, ஹொங்ஹொங் மற்றும் சாங்காய் வங்கி, இந்தியன் வங்கி இன்டியன் ஓவர்சிஸ் வங்கி, ஸ்ரேற் பாங் ஒவ் இந்தியா, ஹபிப் வங்கி ஆகிய எட்டு வங்கிகளைச் சேர்ந்த ஊழியர்களே தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்க உள்ளனர்.

கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலுமுள்ள மேற்படி வங்கி ஊழியர்கள் ஏப்ரல் 10 ஆம் திகதியன்று சமகாலத்தில் வங்கிகளை விட்டு வெளிநடப்புச் செய்தனர்.

களையும், குரோதத்தையும் வளர்ப்பதாகவுள்ளன எனவும் தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் பௌத்த குருமாரின் சார்பில் பேசிய மடகும்பற அசாலி தேரோ தமிழ் மக்கள் போராடிக் கொண்டே வாழ்கின்றார்கள் என்றார். மேலும், தென்னிலங்கையில் பலத்த எதிர்ப்புக்கள் இருந்தபோது தாம் இங்கு வந்ததாகவும், தமது பயணம் குறித்துத் தாம் சந்தோசமடைவதாகவும் தெரிவித்தார்.

போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு திருமலை நட்சத்திரங்கள் அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை அண்ணா அணி மோதவுள்ளது சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் இப் போட்டி நடைபெறவுள்ளது.

### குடும்ப

பதிவு அட்டைகளை உடனடியாகப் பூர்த்தி செய்து உரிய ேலத்திற்கு முன்பாக கிராம சேவையாளரிடம் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# வட பகுதிக்கு வெளியே செல்லும் விண்ணப்ப படிவத்தின் மாற்றம்

01.05-92 முதல் வடபகுதிக்கு வெளியே செல்ல அனுமதிகோரும் விண்ணப்ப படிவம் குடாநாட்டிற்குள் மாற்றம் செய்ய படவுள்ளதால் பழைய விண்ணப்ப படிவத்தை கைவசம் வைத்திருக்கும் விண்ணபதாரிகள் 01-05-92 க்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

01-05-92 க்கு பின்னர் குடாநாட்டில் உள்ள அனுமதி வழங்கும் காரியாலயங்களில் பழைய படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதனை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் தெரியப்படுத்துகின்றனர்.

**போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு**

(2495)

# மரண அறிவித்தல்

## செல்லையா பேரம்பலம்

மண்கும்பானை பிறப்பிடமாக கொண்டவரும் நல்லூர் வைமன் வீதியை வசிப்பிடமாக கொண்டவருமான செல்லையா பேரம்பலம் நேற்று அதிகாலை இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும். பரமேஸ்வரன், ஞானேஸ்வரன், குணேஸ்வரன், விமலாதேவி, யோகேஸ்வரன், சர்வேஸ்வரன், விக்னேஸ்வரன், இராஜேஸ்வரன், ஆகியோரின் அன்புத் தகப்பனாரும். ஆனந்தராசா (நியூ லலிதா நகை மாளிகை உரிமையாளர்) விக்னேஸ்வரி, வரதலெட்சுமி நகுலாம்பிகை, சுபாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும். சௌமிகாந்த், அர்ச்சனா, டினேஸ், மதனகாந்த், சுதாஜினி, தினுஸா, கிரிசாத், கீதன், கிரிதாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார் அன்னார் நியூ லலிதா, நியூ ஆனந்தா, ராதிகா (நகை மாளிகைகளின்) உரிமையாளர்களின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக் கிழமை (23. 04. 92) பி. ப. 2. 30 மணிக்கு வைமன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

- தகவல்
பிள்ளைகள்

(2492)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.